**BEFORE THE NATIONAL GREEN TRIBUNAL**
**SOUTHERN ZONE, CHENNAI**

**O.A.No. 181 of 2020 (SZ)**

M/s Sarangam
Cuddalore ... Petitioner

Vs

The District Collector,
Cuddalore and others.

--- Respondents

**INDEX TO TYPED SET OF PAPERS**

| S. No | Date | Description of document | Page No |
|---|---|---|---|
| 1 | 10.05.2016 | Copy of Letter from Assistant Director of Fisheries, Parangipettai to Thiru.R.Sarangan,Cuddalore | 1 |
| 2 | 06.04.2018 | Copy of Letter from Assistant Director of Fisheries, Parangipettai to Thiru.R.Sarangan,Cuddalore | 2-3 |
| 3 | 13.04.2018 | Copy of Letter from Assistant Director of Fisheries, Parangipettai to Thiru.R.Sarangan,Cuddalore | 4 |
| 4 | .11.2020 | Copy Letter from Tahsildar, Cuddalore to Joint Director , Animal Husbandry, Cuddalore | 5-6 |
| 5 | | Site Map in Survey No: 21 | 7 |
| 6 | | Photo Copy of site inspection by District Collector | 8-10 |

Certified that the above documents are true copies.

Dated at Chennai on this day of Mar 2021.

V. R. [signature]
Govt. Standing Counsel for
National Green Tribunal
Southern Zone, Chennai.

(1)

## மீன்வளத்துறை

**அனுப்புநர்:-**
திரு.இரா.கருணாகரன், பி.எப்.எஸ்ஸி.,
மீன்துறை உதவி இயக்குநர்,
பரங்கிப்பேட்டை.

**பெறுநர்:-**
திரு.ஆர். சாரங்கன், த/பெ.இராஜா,
No. M11, வில்வ நகர்,
ஹவுசிங் போர்டு, கடலூர் –1.

ந.க.எண்.20/DLC/CAA/2015, நாள். 10 .05.2016.

அய்யா,

பொருள்:- மீன்வளம் – கடலூர் மாவட்டம், சுப உப்பலவாடி கிராமத்தில் விவசாய நிலங்களுக்கு அருகில் இறால் பண்ணை அமைக்க அனுமதி வழங்குவதை தடை செய்யக் கோருதல் – தொடர்பான மனு மீது நடவடிக்கை எடுத்தல் – தொடர்பாக.

பார்வை:-
1. திரு.ஆர்..சாரங்கன், திரு.ஆர்.இராஜமாணிக்கம், திரு.துளசிங்கம் மற்றும் திரு.கேசவன், சுப உப்பலவாடி அவர்களது கடித நாள். 23.02.2016.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனு எண். 58604 நாள் 22.3.16 மற்றும் 52203 நாள் 15.3.16

-----------

பார்வை 1–ல் காணும் மனுவில் கடலூர் வட்டம், சுப உப்பலவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு.ஆர்..சாரங்கன், திரு.ஆர்.இராஜமாணிக்கம், திரு.துளசிங்கம் மற்றும் திரு.கேசவன் அவர்களால் அளிக்கப்பட்ட புகார் மனுவில் சுப உப்பலவாடி கிராமத்தில் திரு.சம்மந்தம், த/பெ.இராமச்சந்திரன் என்பவர் இறால் குட்டை அமைக்க விண்ணப்பித்துள்ளதாகவும், அதனை தடைசெய்து விவசாய நிலங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்திடுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

சுப உப்பலவாடி கிராமத்தில் திரு.சம்மந்தம், த/பெ.இராமச்சந்திரன் என்பவர் 21/6B என்ற புல எண்ணில் இறால் பண்ணை அமைக்க இவ்வலுவலகத்திற்கு விண்ணபித்துள்ளார். தற்போது மேற்காணும் இடத்தில் இறால் குட்டை ஏதும் அமைக்கப்படவில்லை. இவரது விண்ணப்பமானது மாவட்ட குழு உறுப்பினர்களால் 9. 2. 16 மற்றும் 18. 2. 16 ஆகிய நாட்களில் தள ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மாவட்டக்குழு உறுப்பினர்களின் ஆய்வறிக்கைகள் பெறப்பட்டவுடன் அதன் அடிப்படையில் இப்பொருள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் தங்களுக்கு தெறிவிக்கப்படுகிறது.

10/5/16

மீன்துறை உதவி இயக்குநர்க்காக
பரங்கிப்பேட்டை.

நகல் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனு, மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.

21/5/16

OCC

## மீன்வளத்துறை

அனுப்புநர்,

திரு .சி. சுப்பிரமணியன் எம்.எஸ்சி; எம்.எட்; எம்பில்,.
மீன்துறை உதவி இயக்குநர்,
பரங்கிப்பேட்டை.

பெறுநர்,

திரு. அ. சாரங்கம்,
எம். 11, வில்வநகர் ஹவுசிங் போர்டு,
கடலூர் - 1

ந.கா.எண். 21/DLC/CAA/2013, நாள்: 06 .04.2018

அய்யா,

பொருள்: மீன்துறை – கடலூர் வட்டம் – சுப உப்பலவாடி கிராமத்தில் சம்மந்தம் த/பெ. ராமச்சந்திரன், அவர்கள் இறால் பண்ணை வளர்க்க அனுமதி விண்ணப்பத்தை ரத்து செய்திட கேட்டல் தொடர்பாக.

பார்வை: 1. மாவட்ட ஆட்சியர் கடலூர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் தங்களது மனு இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 30.01.2018

---

கடலூர் மாவட்டம் சுப உப்பலவாடி கிராமத்தை சேர்ந்த திரு. சம்மந்தம், த/பெ.ராமச்சந்திரன் என்பவர் அதே கிராமத்தை சேர்ந்த ஆர். சாரங்கம், த/பெ. ராஜா, ஆர். ராஜமாணிக்கம், த/பெ. ராமச்சந்திரன், துளசிங்கம் த/பெ. ராஜா, கேசவன், த/பெ. ராஜா, ஆகியோர்களின் விலை நிலத்தையும் சிறு விவசாயி ஆகிய மேற்கொண்ட நபர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் எண்ணத்தில் திரு. சம்மந்தம் என்பவர் அவரது சாகுபடி செய்யும் விலை நிலத்தில் உப்பு நீரை தேக்கி, JCP இயந்திரத்தின் மூலம் இறால் பண்ணை வெட்ட ஆரம்பித்தார் என மனுவில் தெரிவித்துள்ளீர்கள்.

திரு. சம்மந்தம் என்பவரது நிலத்தை மீன்துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டதில், அவரது நிலம் இறால் பண்ணை அமைப்பதற்கு உகந்தது இல்லை என தெரிய வருகிறது. மேலும் திரு. சம்மந்தம் புதிய இறால் பண்ணை அமைக்க இவ்வலுவலகத்தில் கொடுத்த விண்ணப்பத்தை ரத்து செய்து, மீன் பண்ணை அமைப்பதற்காக அனுமதி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி, மீன்பண்ணை அமைக்க கோரப்பட்டுள்ள நிலையில் மீன்துறையின் அனுமதி இன்றி இறால் பண்ணை அமைத்தால் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படுவேன் என்றும் தெரிவித்துள்ளார் திரு. சம்மந்தம் என்பவர் மீன்வளர்க்கும் பட்சத்தில் முறையாக நீர் வெளியேற்றுவதற்கு வடிகால்கள் அமைத்து அருகிலுள்ள விவசாயநிலம் பாதிப்பு அடையாத அளவிற்கு கெண்டை மீன்வளர்ப்பு மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது என்பதனை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன்துறை உதவி இயக்குநர்
பரங்கிப்பேட்டை.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

1. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.
2. மீன்துறை இணை இயக்குநர் (மண்டலம்) கடலூர்.

06/04/18

6/4/18

அனுப்பப்பட்டது

ப.க,

விரைவு அனுப்பப்பட்டது மீஉஇ ஒப்புதலுக்காக

6/4/18

மீஉஇ.

06/04/18

(4)

மீன்வளத்துறை

அனுப்புநர்,

திரு .சி. சுப்பிரமணியன் எம்.எஸ்சி; எம்.எட்; எம்பில்,.
மீன்துறை உதவி இயக்குநர்,
பரங்கிப்பேட்டை.

பெறுநர்,

திரு. அ. சாரங்கம்,
எம். 11, வில்வநகர் ஹவுசிங் போர்டு,
கடலூர் - 1

ந.கா.எண். 21/DLC/CAA/2013, நாள்: 13 .04.2018

அய்யா,

பொருள்: மீன்துறை – கடலூர் வட்டம் – ரெட்டிச்சாவடி சரகம் சுப உப்பலவாடி கிராமம் – விளை நிலத்தில் இறால் பண்ணை அமைத்தல் – புகார் அளித்து நடவடிக்கை கோருதல் – மனுவிற்கு பதில் அளிப்பது – தொடர்பாக.

பார்வை: 1. மாவட்ட ஆட்சியர் கடலூர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் பெறப்பட்ட முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனு எண்: 017623. நாள்: 08.01.2018.

---

பார்வையில் காணும் மனுவில் திரு. சம்மந்தம் த/பெ. ராமச்சந்திரன் அவர்களின் இறால் பண்ணையால் மனுதாரரின் விளைநிலம் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மனு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டதில் திரு. சம்மந்தம் தனது நிலத்தில் (சர்வே எண்: 21/6B) உள்நாட்டு மீன் வளர்ப்பு செய்து வருகிறார், இறால் வளர்க்கவில்லை. மேலும் அவரது நிலத்தில் மீன் குட்டைக்கு அருகில் விவசாயமும் செய்து வருகிறார். எனவே, மீன்வளர்ப்பினால் தங்களது நிலத்திற்கு எந்தவித பாதிப்பும் வராது என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

13/4/18

O/C மீன்துறை உதவி இயக்குநர்
பரங்கிப்பேட்டை

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
1. உயர் திரு. மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம்
கடலூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

வரைவு அனுப்பப்பட்டது மீஉ இ ஒப்புதலுக்காக.

13/4/18

அனுப்பப்பட்டது

மீஉ இ

13/04/18 13/4/18

அனுப்புநர்

திரு. அ.பலராமன்,
வருவாய் வட்டாட்சியர்,
கடலூர்.

பெறுநர்

மண்டல இணை இயக்குநர்,
கால்நடைபராமரிப்புதுறை,
கடலூர்.

ந.க.அ1/ 2363/2020, நாள்: .11.2020.

அய்யா,

பொருள்: ஆக்கிரமிப்பு - கடலூர் வட்டம், சுப உப்பலவாடி கிராமத்தில் உள்ள மேய்க்கால் புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பாளர் விவரம் அனுப்பி வைத்தல் - தொடர்பாக.

பார்வை: கடலூர் உதவி இயக்குநர் கால்நடை பராமரிப்புத்துறை கடித எண் ந.க.எண்1278/ஆ/14 நாள்:09.11.2020.

- - - - - -

கடலூர் வட்டம் ரெட்டிச்சாவடி குறுவட்டம், சுப உப்பலவாடி கிராம புல எண்.25-ல் 6.71.0 ஏர்ஸ் பரப்பு மேய்க்கால் புறம்போக்கு என அரசு கணக்கில் பதிவாகியுள்ளது. மேற்படி மேய்க்கால் புறம்போக்கு இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து நெல் மற்றும் இதர பயிர்கள் சாகுபடி செய்து வருகின்றனர். மேற்படி புலம் தொடர்பாக மேன்மைமிகு டெல்லி பசுமை தீர்ப்பாயத்தில் புகார் மனு அளித்துள்ளதை தொடர்ந்து, மேற்படி இடத்தினை கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நேரடி புலத்தணிக்கை செய்யப்பட்டது. தணிக்கையின் போது மேய்க்கால் புறம்போக்கு இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றம் செய்ய உத்தரவிட்டார். ஆக்கிரமிப்பாளர்கள் விவரம் பின்வருமாறு:

1. தரணிதரன்
2. தியாகராஜன்
3. சம்மந்தம்
4. சாரங்கம்
5. ராஜமாணிக்கம்
6. நடேசன்
7. சீனுவாசன்
8. சுவாமிநாதன்
9. ஜெயபாலன்
10. கோவிந்தன்
11. பாவாடை
12. சீனுவாசன்

மேய்க்கால் புறம்போக்கு கால்நடை பராமரிப்புத்துறை கட்டுப்பாட்டில் இருப்பதனால் மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றம் செய்ய A1 நோட்டீஸ் சார்வு செய்து உரிய கால

அவகாசம் அளித்து ஆக்கிரமிப்புகளை அகற்றம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: வருவாய் கணக்கு நகல்

தங்கள் உண்மையுள்ள

வருவாய் வட்டாட்சியர்,
கடலூர்.

நகல்:

1. மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர்.
2. வருவாய் கோட்டாட்சியர் கடலூர்.
3. உதவி இயக்குநர் மீன்வளத்துறை கடலூர்.
4. மாசுகட்டுப்பாட்டு வாரியம், கடலூர்.
5. இணை இயக்குநர் விவசாயம், கடலூர்.

District : Cuddalore


Taluk : Cuddalore

Village : Subauppalavadi [34]

Survey No : 21

Area : Hect 03 Ares 44.50

Scale : 1 : 2000




Issue: 08-11-2020 15:15:35

mv.240




8


SHOT ON REDMI 7
AI DUAL CAMERA


SHOT ON REDMI 7
AI DUAL CAMERA

**BEFORE THE NATIONAL**
**GREEN TRIBUNAL**
**SOUTHERN ZONE, CHENNAI**

**O.A.No. 181 of 2020 (SZ)**

Type set

Govt. Standing Counsel for
National Green Tribunal
Southern Zone, Chennai.